பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

28 09 2024 7 15

சனிக்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்களின் நலனுக்காக மாணவர்கள் எதிர்காலத்தில் உழைக்க வேண்டுமென்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்
2. ஜம்மு-கஷ்மீர் மக்கள் அமைதியான சூழலை விரும்புவதாக பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.
3. பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்களுக்கு மத்திய அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருவதாக மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.
4. வங்காளா விரிகுடா நாடுகளின் வளர்ச்சிக்கு இந்தியா முழு ஒத்துழைப்பை அளிக்கும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.
5. இந்தியா – பங்ளாதேஷ் அணிகளுக்கு இடையேயான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது நாள் ஆட்டம் இன்று மழை காரணமாக ரத்து செய்யப்பட்டது.

<u>*---- இனி விரிவான செய்திகள் --*</u>

**[]<<<>>>[]**

பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்களின் நலனுக்காக மாணவர்கள் பாடுபட வேண்டுமென்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

ஹைதராபாத்தில் நல்சார் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர், மாணவிகள் அனைத்து தேர்வுகளிலும் அதிக அளவல் தேர்ச்சி பெற்று வருவது மகிழ்ச்சி அளிப்பதாக தெரிவித்தார்.

மகளிருக்கான அதிகாரத்தை அவர்கள் பெற்றுள்ள கல்வி உறுதி செய்யும் என்றும் அவர் கூறினார்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்க அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அரசின் இலக்குகளை எட்டுவதற்கு மாணவர் சமுதாயம் ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென்றும் திரௌபதி முர்மு குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

ஜம்மு-கஷ்மீர் மக்கள் அமைதியான சூழலில் வாழ விரும்புவதாகவும், அவர்களின் குழந்தைகளின் எதிர்காலத்தை வளமாக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் உழைத்து வருவதாகவும் பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

ஜம்மு-வில் இன்று தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலில் முதல் இரண்டு கட்ட வாக்குப்பதிவில் மக்கள் அதிக அளவில் வாக்களித்திருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக தெரிவித்துள்ளார்.

நாட்டிற்காக இன்னுயிர் ஈந்தவர்கள் குறித்து காங்கிரஸ் கட்சி கவலைப்படவில்லை என்று அவர் கூறினார்.

ராணுவத்தினரின் குடும்பத்திற்காக எந்த நலத்திட்டங்களையும் அவர்கள் செயல்படுத்தவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு ராணுவ அதிகாரிகளுக்கு கடந்த 2014-ஆம் ஆண்டு கொண்டு வந்த ஒரு பதவி – ஒரு பென்சன் என்ற திட்டம் அவர்களின் குடும்பத்தினருக்கு உதவிகரமாக உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

இத்திட்டத்தின் கீழ் ஒரு லட்சத்து 20 ஆயிரம் கோடி ரூபாய் அளிக்கப்பட்டுள்ளதாக திரு நரேந்திரமோடி தெரிவித்தார்.

[]<<<>>>[]

இந்தியா எஃகு உற்பத்தியில் 144 மில்லியன் என்ற சாதனை அளவை எட்டி உலக அளவில் இரண்டாவது பெரிய எஃகு உற்பத்தி நாடாக உருவெடுத்துள்ளது என்று மத்திய எஃகு மற்றும் கனரக தொழில்துறை இணை அமைச்சர் திரு பூபதி ராஜு ஸ்ரீனிவாசா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று பசுமை எஃகு உற்பத்தி குறித்த மூன்று நாள் சர்வதேச கருத்தரங்கில் உரையாற்றிய அவர், எஃகு உற்பத்தி துறையில் புதிய தொழில்நுட்பங்கள் கொண்டுவரப்பட்டு தரமான எஃகு உற்பத்தி செய்யப்படுவதாகக் கூறினார்.

மின்னணு தொழில்நுட்பத்தை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்தி அதிக அளவில் எஃகு உற்பத்தி செய்யப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்தார்.

எஃகு உற்பத்தியின்போது கரிமப் பொருட்கள் காற்றில் கலப்பதை கணிசமாக குறைத்து சுற்றுச்சூழலை பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

நாட்டில் ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத்துறை தொடர்ந்து வளர்ச்சிபெற்று வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவிதுள்ளார்.

சென்னை கலைவாணர் அரங்கில் அனிமேஷன் விஷுவல் எபெக்ட் குறித்த இரண்டு நாள் கருத்தரங்கில் கலந்து கொண்ட அவர், உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் மத்திய அரசு உற்பத்திக்கான இந்தியா திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்தி வருவதாகக் கூறினார்.

முன்னதாக இன்று காலை சென்னை தூர்தர்ஷன் வளாகத்தில் அன்னையின் பெயரில் ஒரு மரம் வளர்ப்போம் இயக்கத்தில் பங்கேற்று மரக்கன்றை நட்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மத்திய அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருவதாக கூறினார்.

உள்கட்டமைப்பை மேம்படுத்தி பொருளாதாரத்தை உயர்நிலைக்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்க வேண்டுமென்ற இலக்கை எட்டுவதற்கு முனைப்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

கடந்த 25 ஆண்டுகளில் நாடு வளர்ச்சிப்பாதையில் விரைவாக முன்னேறி வருவதாகத் தெரிவித்த அவர், அதிவிரைவு நெடுஞ்சாலைகள், நெடுப்பாதை தொழில் திட்டங்கள், துறைமுகங்களின வளர்ச்சி ஆகியவற்றில் பெரிய அளவில் முன்னேற்றம் கண்டுள்ளதாகவும் கூறினார்.,

உற்பத்திக்கான இந்தியா திட்டத்தின் கீழ் பாதுகாப்பு தளவாட உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்கான திட்டங்களையும் மத்திய அரசு மேற்கொண்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் இறக்குமதி படிப்படியாக குறைந்து ஏற்றுமதி கணிசமாக அதிகரித்து வருவதாகவும் குறிப்பிட்ட அவர், இதனால் நாட்டின் அந்நிய செலாவணியும் உயர்ந்துள்ளதாகத் தெரிவித்தார்.

தேசப்பிதா காந்தியடிகளின் பிறந்த நாளான அக்டோபர் இரண்டாம் தேதியன்று மக்கள் கதர் ஆடைகளை அணிய வேண்டுமென்று அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

உள்நாட்டு பொருட்களை அதிக அளவில் வாங்கி பயன்படுத்துவதன் மூலம் கிராமப்புற பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும் என்று திரு எல் முருகன் கூறினார்.

[]<<<>>>[]

பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்துபேசும் மன் கி பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது, இரவு எட்டு மணிக்கு மறு ஒலிபரப்பும் செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுவையில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

[]<<<>>>[]

வங்காளா விரிகுடா நாடுகளின் சுகாதாரம், வர்த்தகம், முதலீடு ஆகியவற்றுக்கு இந்தியா முழு ஒத்துழைப்பை அளிக்கும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

நியூயார்க்கில் இன்று பிம்ஸ்டெக் வங்காள விரிகுடா நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கூட்டத்திற்கு தலைமை வகித்து அவர் பேசினார்.

உறுப்பு நாடுகளின் பொருளாதார வளர்சசி, உணவு பாதுகாப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் உறுதி செய்யப்பட வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

ஐ நா பொது சபையின் 79-வது உயர்நிலைக் கூட்டத்திலும் திரு ஜெய்சங்கர் இன்று உரையாற்றவுள்ளார்.

[]<<<>>>[]

மகாராஷ்டிராவில் சட்டப்பேரவைத் தேர்தலில் மக்கள் அதிக அளவில் வாக்களித்து ஜனநாயக திருவிழாவை கொண்டாட வேண்டுமென்று தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.

அம்மாநிலத்தில் இரண்டு நாள் பயணம் மேற்கொண்டு தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்து ஆய்வு செய்த தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார், வாக்களிப்பது குறித்த விழிப்புணர்வை மக்களிடையே அதிக அளவில் ஏற்படுத்த வேண்டுமென்று கூறினார்.

தேர்தல் ஆணையர்கள் திரு ஞானேஸ்குமார், திரு சுக்பீர்சிங் சந்து ஆகியோருடன் 11 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சித் தலைவர்களுடன் ஆலோசனை நடத்திய தலைமை தேர்தல் ஆணையர், வாக்குப்பதிவுக்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்கூட்டியே திட்டமிட்டு செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் அதிகபட்சமாக தொள்ளாயிரத்து 50 வாக்காளர்கள் என்ற அடிப்படையில் கூடுதல் வாக்குச்சாவடிகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர் அறிவுறுத்தினார்.

கிராமப்புற பகுதிகளில் உள்ள 50 சதவீத வாக்குச்சாவடிகளில் வெப் கேமராக்கள் பொருத்தப்பட்டு கண்காணிக்க வேண்டுமென்றும் அவர் கூறினார்.

நகர்புறங்களில் அனைத்து வாக்குச்சவாடிகளிலும் வெப் கேமராக்கள் நிறுவப்பட வேண்டுமென்றும் தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார் கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

குஜராத் மாநிலத்தில் பேருந்தில் பயணம் செய்தபோது ஆற்று வெள்ளத்தில் சிக்கிய தமிழகத்தைச் சேர்ந்த 26 பேர் பத்திரமாக மீட்கப்பட்டு பாவ்நகரில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

இவர்கள் அனைவரும் வரும் ஒன்றாம் தேதி ரயில் மூலம் சென்னை திரும்ப உள்ளதாக அயலக தமிழர் நலத்துறை தெரிவித்துள்ளது.

பாவ்நகருக்கு புனித யாத்திரை மேற்கொண்டிருந்தபோது நேற்று முன்தினம் இவர்கள் பயணம் செய்த பேருந்து மாலேஸ்ஶ்ரீ ஆற்றை கடக்க முயன்றபோது திடீர் வெள்ளத்தில் சிக்கியது.

மாநில அயலக தமிழர் நலத்துறை கேட்டுக் கொண்டதன் பேரில், குஜராத் மாநில அரசும், அங்கு முகாமிட்டுள்ள தேசிய பேரிடர் மீட்புப்படையினரும் இந்த 26 பேரையும் பத்திரமாக மீட்டு பாவ்நகரில் உள்ள முகாமில் தங்க வைக்கப்பட்டதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**[]<<<>>>[]**

ஹெஸ்புல்லா அமைப்பின் முக்கிய படை தளபதி ஹசன் நசரல்லா இஸ்ரேலிய படைகள் நடத்திய துப்பாக்கி சூட்டில் கொல்லப்பட்டு விட்டதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

லெபனானில் ஹெஸ்புல்லா அமைப்பும் பெய்ரூத்தில் தங்களது படை தளபதி ஹசன் நசரல்லா கொல்லப்பட்டதை அறிக்கை மூலம் உறுதி செய்துள்ளது.

**[]<<<>>>[]**

இந்தியா – பங்ளாதேஷ் அணிகளுக்கு இடையேயான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் மழை காரணமாக இன்று ரத்து செய்யப்பட்டது.

பங்ளாதேஷ் முதல் இன்னிங்ஸில் மூன்று விக்கெட் இப்புக்கு 107 ரன் எடுத்துள்ளது.

**[]<<<>>>[]**

17 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டியில் இந்தியா இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

பூட்டானில் நடைபெற்ற இப்போட்டியில் நான்கு - இர்ணடு என்ற கோல் கணக்கில் இந்தியா, நேபாளத்தை வென்றது.

**[]<<<>>>[]**

**Rwanda**–வில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரண் சிங், **Adil Kalyanpur** ஆகியோர் அரையிறுதி ஆட்டங்களில் தோல்வியடைந்தனர்.